**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 182/2019 |
| Name | : Gopal |
| P.W. | : 7 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.07.2026**

**எதிரிகள் 1 , 2 மற்றும் 4 நீதிமன்றத்தில் ஆஜர்**

**3ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSSன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 13.04.2016ம் தேதி நான் மடத்துக்குளம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது முதல் நிலை காவலர் முத்துச்சாமி மடத்துக்குளம் காவல் நிலைய குற்ற எண்.103/2016 இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii) ன் படி பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை மற்றும் வழக்குக் கோப்பை மாலை 17.30 மணிக்கு பெற்று 13.04.2016ம் தேதி மாலை 18.00 மணிக்கு சம்பவ இடம் சென்று ஆனந்த்குமார் மற்றும் பூபதி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.7 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் சாட்சிகள் ராம்குமார், நாகராஜன், பிரேமா மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின்

விசாரணையில் எதிரிகள் வாதிகளுக்கு சொந்தமான இடத்தில் அத்துமீறி உள்ளே நுழைந்து சம்பவத்தில் ஈடுபட்டது தெரிய வந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii)ல் இருந்து இதச பிரிவுகள் 447, 294(b), 323, 506(ii) ஆக சட்டப்பிரிவுகளை மாறுதல் செய்து அறிக்கை தாக்கல் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்குக் கோப்பை தொடர் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் துரைசாமி அவர்கள் வசம் ஒப்படைத்தேன். இவ்வழக்கின் உதவி ஆய்வாளர் காலம் சென்ற துரைசாமி என்பவரின் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் நான் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் துரைசாமி அவர்கள் 14.04.2016 ம் தேதி சாட்சிகள் மணிகண்டன் மற்றும் செல்வம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கின் மற்ற சாட்சிகள் என்னிடம் சொன்ன அதே சங்கதிகளை சொன்னதால் அவர்களிடம் மீண்டும் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் மாண்பமை உயர் நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதால் கைது செய்யவில்லை. பின்னர் காயம்பட்டவர்கள் ராம்குமார், நாகராஜ் மற்றும் பிரேமா ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் வினோத்குமாரை விசாரித்து மூன்று காயச் சான்றுகள் பெற்றுள்ளார். இவ்வழக்கில் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) எதிரிகளுக்கும், அ.சா.1 க்கும் இடையே வீட்டு இடம் சம்மந்தமாக முன் விரோதம் இருந்தது என்பதை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அ.சா.1 எதிரிகள் மீது உடுமலை உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 145/2014 என்ற வழக்க தாக்கல் செய்து நிலுவையில் உள்ள விவரம் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். சிவில் வழக்கு நிலுவையில் உள்ள போது சம்மந்தப்பட்ட இடத்தில் கட்டிட வேலை செய்ததாக அ.சா.1 எனது விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.2 பிரேமா, அ.சா.3 நாகராஜ் ஆகியோரை சம்பவ இடத்தில் வைத்து 13.04.2016 ம் தேதி விசாரித்தேன்.

(2) சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் வீடுகள் நிறைந்து மக்கள் நடமாட்டம்

அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் மேஸ்திரி மணிகண்டன், சித்தாள் செல்வம் ஆகியோரைத் தவிர வேறு கண்ணுற்ற சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் கான்கீரீட் போட்டுக்கொண்டிருந்ததாக அ.சா.1 எனது விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

(3) அ.சா.1 எனது விசாரணையில் 1ம் எதிரி சதாசிவம் செல்போனில் போட்டோ எடுத்துக்கொண்டிருந்த போது எனது போனை தட்டிவிட்டு என்னை பேஸ்மட்ட குழிக்குள் தள்ளிவிட்டார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது விசாரணையிலோ, புகார் வாக்குமூலத்திலோ 2ம் எதிரி கிருஷ்ணமூர்த்தி குச்சியால் அடித்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். 2ம் எதிரி குச்சியை காட்டி மிரட்டியதாக சொன்னார். எனது விசாரணையிலோ, புகார் வாக்குமூலத்திலோ அ.சா.1யை எதிரிகள் தன்னை செங்கலால் தாக்கியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்தின் போது தான் வீடியோ எடுத்ததாக எனது விசாரணையிலோ, புகார் வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வீடியோ எதுவும் என்னிடம் ஒப்படைக்கவில்லை.

(4) எனது விசாரணையில் அ.சா.2 தன்னையும் தனது கணவரையும் குரல்வளையில் கை வைத்து நெருக்கி நெஞ்சில் கால் வைத்து உதைத்ததாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் அ.சா.3 நாகராஜ் என் மகன் மேசனை வேலை செய்யச் சொன்ன போது எதிரிகள் என்னடா நாங்கள் சொல்வதை கேட்கமாட்டாயா என்று சொல்லி தகாத வார்த்தையால் பேசி அடித்துவிட்டார்கள் நான் போய் கேட்ட போது என்னையும், என் மனைவியையும் அடித்துவிட்டார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளார். நான் சொன்னபடி, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த வழக்குச் சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1க்கு, எதிரிகளுக்கும் இடையே இடம் சம்மந்தமாக சிவில் வழக்கு நடந்து வந்தது என்றும் அதையும் மீறி அ.சா.1 கட்டிட வேலை செய்தார் என்றால் அ.சா.1க்கு ஆதரவாக இடைக்கால தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இடைக்கால தடை உத்திரவை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சிவில் வழக்கு நிலுவையில் இருந்த போது அ.சா.1 கட்டிட வேலை செய்ததால் எதிரி தடுத்ததால் பொய்யாக இந்த புகாரை அ.சா.1

கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் வீடுகள் நிறைந்த பகுதி என்றும் அங்குள்ள சாட்சிகள் யாரையும் விசாரித்து இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சாட்சிகள் அ.சா.1ன் நெருங்கிய உறவினர்கள் மற்றும் அ.சா.1ன் விருப்ப சாட்சிகள் என்றால் சரியல்ல. மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதி என்பதால் சம்பவ இடத்தில் சம்பவம் நடைபெற வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரைப் பெற்று சரிவர விசாரிக்காமல் வழக்கு பதிவு செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.17 18:41:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்